அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 21/2006(11)

எனது இல: தா/4/3/1/14 – 1
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு . 07
2007 நவம்பர் 19 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் , அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் யாவர்க்கும்.

**அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றின் தற்காலிக, அமய, பதிலீட்டு அத்துடன் ஒப்பந்த அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்களை நிரந்தரப்படுத்தல்.**

மேற்படி தலைப்பின் கீழ் 2007.07.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 21/2006(1) இன் மூலம் திருத்தம் செய்த 2006.12.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2006 ஐ பின் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

02. (III) (ஆ).

தொடர்புடைய பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உரிய கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருக்காவிடினும் வெற்றிடமாகியுள்ள பதவியொன்றில் 2007.06.30 ஆந் திகதிக்கு திருப்திகரமான மற்றும் தொடர்ச்சியாக மூன்று(03) வருட கால சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு அரசாங்கத்தின் பயிற்சி நிறுவனமொன்றின் மூலம் பதவிக்கு ஏற்புடையதாக நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்குபற்றி சான்றிதழொன்றை பெற்றுக் கொண்டதன் பின்னர் வெற்றிடமாகியுள்ள பதவிகளில் நிரந்தரமாக்கப்படலாம்.

03. அச் சுற்றறிக்கையின் பந்தி III (இ) யில் பாடநெறிகளை நடாத்தி முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி 2007.12.31 என்று திருத்தப்படுகிறது.

04. சலுகை அடிப்படையில் நியமனங்கள் வழங்கியுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2006 மற்றம் 21/2006(1) இன் தேவைகளை பூர்த்தி செய்துள்ளதும், நாட்சம்பளம் செலுத்தப்படுகின்றதுமான ஊழியர்களையும் நிரந்தரப்படுத்த முடியும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

05. இதன் பின்னர் ஏற்புடைய பதவிகளுக்காக உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதிருப்பவர்களை தற்காலிக, அமய, பதிலீட்டு, சலுகை அல்லது ஒப்பந்த அடிப்படையிலேனும் ஆட்சேர்ப்புச் செய்தலானது, அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அவ்வாறு செயற்படும் பொறுப்பு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நியமன அதிகாரி மற்றும்/ அல்லது, நியமனக் கடிதங்களுக்கு கையொப்பமிடும் அலுவலர் ஆகியோரை சார்ந்திருக்கும்.

ஒப்பம்/டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு